# நிலைபேறு சுற்றுலாத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் - 2012

## 1. அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைப்பதற்கிருந்த தகவல்களுக்கமைய, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 381,595 ஆகும். 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,590,951 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டிற்கான ஆக்கக் கூறுவாரியான செயற்திட்டச் செலவினத்தின் பொழிப்பு மற்றும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே காட்டப்படுகின்றது.

| செலவின வகையறா | டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| உசாத் துணைக் கட்டணம் | 300,000 | 1,411,850 | 1,711,850 |
| விளம்பரங்களும் பிரசுரங்களும் | - | 518,643 | 518,643 |
| நிர்வாகச் செலவினம் | 81,595 | 866,988 | 948,583 |
| ஏனைய செயற்திட்டச் செலவினம் | - | 408,864 | 408,864 |
| நிதிக் கிரயம் | - | 3,011 | 3,011 |
| | 381,595 | 3,209,356 | 3,590,951 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

செயற்திட்ட ஆரம்பத்திலிருந்து விசேட (டொலர்) கணக்கு எதுவும் இருக்கவில்லை.

## 3. கணக்காய்வு அவதானிப்புரைகள்

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) குறித்த செயற்திட்டக் காலத்தினுள் செயற்திட்ட நோக்கங்கள் எய்தப் பெற்றதை உறுதி செய்வதற்கு, செயற்திட்டத்தின் முற்றான காலப்பகுதியையும் உள்ளடக்கிய விரிவான செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், 2012 டிசெம்பர் 31 வரை அவ்வாறானதொரு திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உதவியாளர் செயற்திட்டத்தின் தகவல் தொழில்நுட்ப உசாத்துணையாளராக நியமிக்கப்பட்டு மூன்று மாத காலப்பகுதிக்கு மாதாந்தம் ரூபா 225,000 படியாக வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அமுலாக்காமை காரணமாக அவரது சேவை ஆக்கபூர்வமாக அமையவில்லை

(இ) செயற்திட்ட நடவடிக்கைகள் துரிதமாக அமையாமையால் 2011 நவம்பரிலிருந்து ரூபா 6,455,222 வங்கிக் கணக்கிலிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 237,388 பெறுமதியான நடைமுறை அல்லாத சொத்துக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் 2.03 மற்றும் 2.04 பிரிவுகளின் பிரகாரம் சேவைக் கட்டணமும் கடப்பாட்டுக் கட்டணமும் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான செயல்திட்டம் மற்றும் கொள்வனவுத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டுக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4. செயலாற்றல் மீளாய்வு

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளது செயலாற்றல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினாலோ அல்லது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையாலோ மதிப்பாய்வு செய்யப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாட்டுடன் ஒப்பிடுகையில் 0.28% நிதிசார் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியளித்தல், பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் நிதிப் பயன்பாடு சிலவற்றினது புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) நிதியளிப்பு உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை எஸ்டீஆர் 11.6 மில்லியன் ஆகும்.

(ii) மீளாய்வாண்டிற்காக செய்யப்பட்ட பாதீட்டு நிதியேற்பாடு ரூபா 132 மில்லியன் ஆகும்.

(iii) ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் ரூபா 381,595 ( ஐ.அ.டொ.381.5) மாத்திரமேயாகும்.